பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 03 2026** **MONDAY** **6.30 PM**

## <u>மாநிலச் செய்திகள்</u>

## <u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியா ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை பாதுகாப்பாக மீட்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3)** தமிழகத்தில் கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலம் 3 கோடி மக்கள் பயனடைந்திருப்பதாக மாநில அரசு கூறியுள்ளது.

**4)** பிரதமரின் தமிழக பயணத்தின்போது போராட்டத்தை தூண்டிவிட்டு திமுக அரசு வேடிக்கை பார்த்தது கண்டனத்திற்குரியது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

**5)** நெதர்லாந்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Shaina Manimuthu** வெண்கலப்பதக்கம் வென்றார்.

-இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

உலகின் விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்தியா — கனடா தலைமைச் செயல் அதிகாரிகள் அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

இதுவரை இல்லாத அளவிற்கான வேகத்தில் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கனடா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

முன்னதாக, கனடா பிரதமர் திரு **Mark Carney**-யுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த திரு நரேந்திர மோடி, எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியா ஆதரவு அளிக்கும் என்றார்.

***(Sound Byte — Modi (1) — 27 Sec. )***

கனடா பிரதமருடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

(Sound Byte — Modi (2) — 32 Sec. )

<<<<<<>>>>>>

இஸ்ரேல் — ஈரான் மோதல் காரணமாக வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுவாழ் இந்தியர்களின் பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக அரசின் திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைந்திருப்பதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் இதுவரை இல்லாத அளவிற்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலம் 3 கோடி மக்கள் பயனடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

அறநிலையத்துறை சார்பில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றிருப்பதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பிரதமரின் தமிழக பயணத்தின்போது போராட்டத்தை தூண்டிவிட்டு திமுக அரசு வேடிக்கை பார்த்தது கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரான் தாக்குதல் தொடர்பாக இஸ்லாமிய அமைப்புகளும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இணைந்து அமெரிக்க துணை தூதரத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முயன்றதை சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக-வின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஆசிரியர்கள், தூய்மைப்பணியாளர்கள, செவிலியர்கள் போன்றவர்கள் அறவழியில் போராடியபோது அவர்களுக்கு அனுமதி மறுத்த காவல்துறை, நேற்று மட்டும் வேடிக்கை பார்த்தது ஏன் என்றும் வினவியுள்ளார்.

இதன்மூலம், பிரதமரின் பாதுகாப்பில் களங்கம் ஏற்படுத்த திமுக அரசு திட்டமிட்டதா என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் உருவப்படத்தை இழிவுபடுத்தியோரை திமுக அரசு உடனடியாக கைது செய்ய வேணடும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் ஆறு லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக ஊழல் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களுக்கு சேவை செய்வதாக கூறி ஆட்சிப்பொறுப்பேற்ற திமுக, இயற்கை வளங்களை சுரண்டுவதை அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

திமுக-வின் இத்தகைய செயல்பாடுகளுக்கு சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

நாள்தோறும் ஒருமணிநேரமாவது இளையோர் புத்தகம் வாசிக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் புத்தக வெளியீட்டுப் பிரிவு சார்பில், பிரபல தமிழ் அறிஞர்கள் எழுதிய நூல்களை வெளியிட்டு அவர் பேசினார்.

***(Sound Byte — Radakrishnan — 38 Sec. )***

<<<<<<<>>>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒருபகுதியாக, தமிழகத்தில் மேம்படுத்தப்பட்ட எட்டு ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் ரயில் நிலையமும் இந்த திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளதற்கு அப்பகுதியை சேர்ந்தவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

***(Sound Byte — வரவேற்பு - 49 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது.

விருதுநகரில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவும் நடத்தப்பட்டது.

இது வாக்களிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளதாக இதில் பங்கேற்ற ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte —Jenifer - 42 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ஈரோடு மாவட்டத்தில் மாணவர்களுக்கான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு முத்துசாமி இன்று வழங்கினார்.

---------------

தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் விழிப்புணர்வு இலட்சினை ஆட்சியர் திரு இளம்பகவத் இன்று அறிமுகப்படுத்தினார்.

---------------

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் காவல்துறையால் பறிமுதல் செய்யப்பட்ட பத்து லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் அழிக்கப்பட்டன.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நெதர்லாந்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Shaina Manimuthu** வெண்கலப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

**Dusseldorf** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

---------------

**Kalaburagi** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sandeepthi Singh Rao** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<END>>>>>>**